# நன்யாங் பல்கலையில் ஓட்டுநரில்லா பேருந்துகள்

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக (என்டியு) மாணவர்கள் இனி தங்கள் பகல் உணவு இடைவேளைக்கும் வகுப்புகளுக்கும் ஓட்டுநரில்லா இணைப்புப் பேருந்துகளைப் பயன்படுத்தலாம்.

இவ்வாண்டின் நான்காம் காலாண்டுக்குள் ஒரு தடவைக்கு 24 பேரை ஏற்றிச் செல்லக் கூடிய இத்தகைய வாகனம் மணிக்கு 500 மீட்டர் வேகத்தில் பயணம் செய்து, மாணவர் அரங்குகளை பிரதான கல்வித்துறைப் பகுதிகளுடன் இணைக்கும்.

இப்படி அது ஒரு நாளைக்கு 300 பயணிகளுக்கு சேவை செய்யும். இந்தப் பாதையில் அது பாதசாரிகள், இதர வாகன போக்குவரத்து போன்ற இடர்பாடுகளையும் சந்திக்க நேரிடலாம்.

புதிய பேருந்துகளை அறிமுகம் செய்வது தொடர்பில், எஸ்எம்ஆர்டியின் செயலாக்கம், பழுதுபார்ப்புப் பிரிவான 'எஸ்எம்ஆர்டி சர்விசஸ்' உடனும் நெதர்லாந்தைச் சேர்ந்த '2கெட்தேர்' நிறுவனத்துடனும் என்டியு நேற்று ஒப்பந்தம் செய்தது.



ஒரு தடவைக்கு 24 பேரை ஏற்றிச்செல்லக்கூடிய பேருந்து 'மாணவர் அரங்குகளை பிரதான கல்வித்துறைப் பகுதிகளுடன் இணைக்கும். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

கடந்தாண்டு நவம்பர் மாதத்திலிருந்து அந்தப் பேருந்து பல்கலைக்கழக வளாகத்தில் சோதிக்கப்பட்டது.

இரண்டு மாணவர் மண்டபங்களுக்கு இடையிலுள்ள 350 மீட்டர் நீளப்பாதையில் பேருந்து சென்றது. பேருந்து இதுவரையில் 4,000 பயணிகளைப் பத்திரமாகக் கொண்டு சென்று அவரவர் போக வேண்டிய இடங்களில் வெற்றிகரமாகச் சேர்த்தது.

பல்கலைக்கழக வளாகம் முழுவதிலும் பேருந்து சேவையாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல்கலைக்குப் பக்கத்திலுள்ள 'கிளின் டெக் பார்க்'குடனும் பேருந்து சேவை இணைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2012ஆம் ஆண்டு முதல் அத்தகைய தானியங்கி வாகனங்களைப் பல்கலைக்கழகம் சோதித்து வருவதாக என்டியுவின் தலைவர் சுப்ரா சுரேஜ் தெரிவித்தார்.

கிடைமட்ட நிலையில் இயங்கும் மின் தூக்கியைப் போல இந்தப் பேருந் துச் சேவை அமைவதாக அவர் கூறினார்.

சிங்கப்பூரின் போக்குவரத்துச் சூழலில் பேருந்துகளை எவ்வாறு இயக்குவது என்பதைப் பற்றி என்டியு அதிகாரிகளுடன் கலந்துரையாடும் முன்னர், கட்டுப்படுத்தப்பட்ட சூழலான பல்கலைக்கழக வளாகத்தில் அவற்றுக்கான சோதனைகள் செய்யப்படுவதாகத் திரு சுப்ரா கூறினார்.

மின் ஸ்கூட்டர், மின் சைக்கிள்கள், பேருந்து சேவைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள 'ஜாலான் ஜாலான்' என்ற சேவையில் இந்தத் தானியங்கிப் பேருந்தும் ஒருங்கிணைக்கப்படும்.